**வாக்குமூலம்**

**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், ஈரோடு**

**வழக்கு எண்.சி.சி.எண்.48/2022**

**வழக்கு சாட்சி.அ.சா.3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | லோகராஜா | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | தங்கராஜ் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

(வழக்கின் எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகளின் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.01.2025**

முதல் விசாரணை

நான் தற்போது திருப்பூர் மாநகர தெற்கு காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

நான் கடந்த 20.01.2020-ம் தேதி ஈரோடு குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை சிறப்பு சார்பு ஆய்வாளருக்கு உதவியாக தாளவாடி - மைசூர் ரோட்டில் வாகன தனிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, மைசூரிலிருந்து வந்த இரண்டு ஆம்னி கார்கரளை நிறுத்தி சோதனை செய்தபோது, அதில் பொது விநியோகத் திட்ட ரேசன் அரிசி இருந்தது. அதை பொதுமக்களுக்கும், ஒட்டல்களுக்கும் விற்பனை செய்வதற்காக கொண்டு செல்வதாக கூறினார்கள். சம்பவ இடத்தில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் உதவி ஆய்வாளர் முகமது தாரிக் அவர்களால் தயார் செய்யப்பட்டது. பின்னர்

சம்பவ இடத்தில் எதிரிகள் நவாஸ், நாகராஜ் ஆகிய இருவரும் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை உதவி ஆய்வாளர் தயார் செய்ய, அதில் நானும், சிறப்பு உதவி ஆய்வாளர் கண்ணன் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். என்னிடம் தற்போது காண்பிக்கப்படும் எதிரி நயாஸ் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். எதிரி நயாஸ் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ**.**சா**.**ஆ**.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் தற்போது காண்பிக்கப்படும் எதிரி நாகராஜ் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். எதிரி நாகராஜ் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ**.**சா**.**ஆ**.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவ இடத்தில் வைத்து, எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட இரண்டு வண்டிகளிலிருந்தும் மொத்தம் ஒரு வண்டிக்கு 700 கிலோ வீதம் 1400 கிலோ ரேசன் அரிசியை உதவி ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ**.**சா**.**ஆ**.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றப்பட்ட பொருட்கள் மற்றும் எதிரிகளுடன் Food Cell அலுவலகம் வந்தோம். எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தும் போது, நான் உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

ஒப்புதல் வாக்குமூலம் எங்கே வைத்து பிரதி எடுக்கப்பட்டது என்றால், எங்கள் அலுவலகத்தில் தான் எடுக்கப்பட்டது. நீங்கள் அலுவலகத்தில் வைத்து தான் சாட்சி கையொப்பம் செய்தீர்கள் என்றால், சரிதான். சம்பவ இடமானது தாளவாடியிலிருந்து மைசூர் செல்லும் பிரதான சாலை என்றால், சரிதான். சம்பவ இடத்தில் பொதுமக்கள் யாரையும் சாட்சியாக விசாரித்து, வாக்குமூலம் பெறவில்லை என்றால், பொதுமக்கள் யாரும் அங்கு இல்லை. வாகனங்களில் பதிவு சான்றிதழ்கள் கைப்பற்றப் பட்டதா என்றால், செய்தோம். வாகன பதிவு சான்றிதழ்களை கைப்பற்றிய விபரம் நீங்கள் கையொப்பம் செய்த கைப்பற்றுதல் மகஜரில் எழுதப் பட்டுள்ளதா என்றால், சரியாக நினைவில் இல்லை. எதிரிகளை அழைத்து சென்று, கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் அரிசி எங்கிருந்து சேகரம் செய்தார்கள் என்பதை குறித்து தெரிந்து கொண்டீர்களா என்றால், இல்லை. சம்பவ இடத்தில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யப்பட வில்லை என்றால், சரியல்ல.

2. நீங்கள் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சொன்ன இடத்தில் வாகன சோதனை எதுவும் மேற்கொள்ளவில்லை என்றாலும், வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்படவில்லை என்றாலும், எதிரிகள் கைது செய்யப்படவில்லை என்றாலும், ஒப்புதல் வாக்குமூலங்கள் கொடுக்கப்பட வில்லை என்றாலும், ஆவணங்கள் தயார் செய்யப்படவில்லை என்றாலும், சரியல்ல. இந்த சம்பவம் பற்றிய விபரங்கள் உங்களுக்கு நேரடியாக தெரியாது

என்று சொன்னாலும், சரியல்ல. இது பொய்வழக்கு என்றாலும், பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னாலும், சரியல்ல.

எதிரி தரப்பு மறு விசாரணை

இல்லை.